**O.S. No. 164/2025**
**Date : 26.03.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW 2 **திரு. வீருசின்னு**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. ஐந்து வருடங்களுக்கு முன்பு அண்ணன் கிரையத்திற்காக பணம் கொடுத்தது தொடர்பாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அதற்காக நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் எதுவும் வரவில்லை, நானாகத்தான் வாதி அழைத்தன் பேரில் வந்துள்ளேன். நான் கையெழுத்திட்ட கிரைய ஒப்பந்தத்தில் என்ன விபரங்கள் எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் தான் முன் நின்று பேசி பணத்தை வாங்கி கொடுத்தேன், ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டேன். சொத்தை பிரதிவாதி விற்க போவதாக சொல்லி நான் தான் வாதியிடம் அந்த விபரத்தைச் சொல்லி ஒப்பந்தம் ஏற்படுத்தினேன் என்றால் சரிதான்.

2. பூவண்ணனுக்கு மருத்துவ சிகிச்சைக்காக பணம் தேவை என்ற காரணத்தினால் தான் பிரதிவாதி சொத்தை விற்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதியை அணுகினார் என்றால் சரிதான். அந்த சொத்தில் வில்லங்கம் எதுவும் கிடையாது உடனே பத்திரம் முடிக்கும் சூழ்நிலையில் தான் அந்த சொத்து இருந்தது என்றால் சரிதான். ஒப்பந்தம் ஏற்படுத்திய ஆறு மாத காலத்தில் பிரதிவாதியின் கணவர் இறந்த காரணத்தினால் ஒப்பந்தப்படி கிரையத்தை முடித்துக் கொள்ளலாம் என்று பிரதிவாதி எங்களை அணுகினார் என்றால் சரியல்ல, நாங்கள்தான் பிரதிவாதியை அணுகினோம்.

3. பிரதிவாதியின் கணவர் இறந்த பிறகு, நான் தான் பிரதிவாதியிடம் கிரையம் முடிக்கலாம் என கேட்டபோது பிறகு பார்க்கலாம் என்று சொன்னார்.. ஒரு ரூபாய் வட்டி கணக்கிட்டு எங்களுக்கு பணத்தை திருப்பி கொடுங்கள் என கேட்டபோது தற்போது பணம் கையில் இல்லை என்றும், பொறுங்கள் என்று

சொன்னார். தாவா சொத்தை வேறு நபருக்கு விற்றுவிட்டு பணத்தை திருப்பித் தருவதாக சொன்னார் என்றால் சரிதான்.

4. வேறு நபர்களுக்கு விற்றுவிடலாம் என்று பிரதிவாதி ஏற்பாடு செய்தபோது வேறு நபர்கள் யாரும் வாங்க கூடாது என்று வாதி தடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. குறைந்த விலைக்கு வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதியானவர் பிரதிவாதி வேறு நபர்களுக்கு விற்பதை தடுக்கிறார் என்றும், வாதியும் கிரையம் வாங்காமல் அலைக்கழிக்கிறார் என்றால் சரியல்ல. சொத்தானது வில்லங்கம் இல்லாத பட்சத்தில் ஒரு வருட கால அவகாசம் ஏன் போட வேண்டும் என்றால், அது பற்றிய காரணம் எனக்கு தெரியாது.

5. இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு வாதி தனது சொந்த பழைய வீட்டை இடித்து புதிதாக வீடு மற்றும் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் கட்டி உள்ளார் என்றால் சரிதான். அந்த கட்டுமானம் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவாகியிருக்குமென்றால் அது பற்றி எனக்கு தெரியாது.அந்த ஒரு வருட காலத்திற்குள் தான் கையில் வைத்திருந்த பணம் அனைத்தையும் புதிய கட்டுமானத்தில் போட்டு விட்டதால் அவரால் இந்த கிரையம் முடிக்க இயலவில்லை என்றால் சரியல்ல, வாதி கிரையம் முடிக்க தயாராக தான் உள்ளார்.

6. பிரதிவாதி தான் கிரையத்திற்கு தயாராக இல்லை. நான் வாதியுடன் உடன் இருப்பவர் என்றும், அதனால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டு பேருமே எனக்கு உறவினர்கள் தான் வேண்டப்பட்டவர்கள். பிரதிவாதி தான் அனுப்பிய பதில் அறிவிப்பில் செய்து தர தயாராக இருப்பதாக கூறியும் ஏன் இதுநாள் வரை நாங்கள் கிரையம் முடிக்கவில்லை என்றால் தற்போது வாதி சொத்தை வாங்க வேண்டாம் என்று முடிவு செய்துள்ளார். நான் கூறுவது பொய் சாட்சி என்றும், எனவே எனது சாட்சி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் பிரதிவாதி சொத்தை விற்பதற்காக தயாராக இருந்து வந்தார் என்றும் எங்களால்தான் பாக்கி

கிரயத் தொகையை தயார் செய்து கிரயம் முடித்துக் கொள்ள நாங்கள் முற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.26 16:15:29 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.